உர பேர ஊழலில் லண்டன் இந்தியத் தூதுவர்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: புரட்டாசி 13உ புதன் (29—9—54)

வெளியூர்: புரட்டாசி 14உ வியாழன் (30—9—54)

மலர்: 2 இதழ்: 92

‘ஆச்சாரியார்’ நாடகத்துக்குத் தடை

திருச்சி, செப். 27—

“ஆச்சாரியார்” என்ற சமூக சீர்திருத்த நாடகம் உறந்தை உலகப்பனால் எழுதப்பட்டு, உறந்தை நாடகக் குழுவினரால் திருச்சி தேவர் மன்றத்தில் 12—2—54-ல் நடத்திக் காட்டப்பட்டது.

அந்த நாடகம் அவதூறாகவும், ஆபாசமாகவும் இருப்பதாக சென்னை அரசாங்கத்தார் குற்றஞ் சாட்டி, சென்னை மாநிலமெங்கும் அந்த நாடகத்தை நடத்தக் கூடாதென தடை செய்துவிட்டார்கள். (க. நி.)

1619 பேர் பலி!

ஜப்பான் அருகே ஏற்பட்ட சூறாவளியில் சமார் 1618 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது. இறந்துபோனவர்களின் உடல்கள் கரையோரங்களில் ஒதுக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றனவாம்.

திரு-தமிழர் அறப் போரின் எதிரொலி

400 பேர்மீது வழக்கு

மாநில சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்தார்களாம்!

திரு—தமிழர்வாழ் பிரதேசங்களை சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென்று, கடந்த ஆகஸ்ட் 11-ந் தேதி நடைபெற்ற திரு தமிழர் போராட்டத்தில் ஈடுபட்ட, தி. த. நா காங்கிரஸ், தி மு க., கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 400 பேர்கள்மீது, பலாத்கார முறையில் மாநில சர்க்காரைக் கவிழ்க்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, தக்கலை, குளித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்தப் போராட்டத்தில் நடைபெற்ற அடக்குமுறை பிரயோகம் பற்றி பகிரங்க விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட திரு—கொ. உயர்நீதி மன்ற நீதிபதி சங்கரன் மட்டும் கொண்ட விசாரணைக் குழு, இவ்வாண்டு அக்டோபர் 25-ந் தேதிக்குள் அறிக்கை கொடுக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புகழ்ந்துபேசி உரிமைகளைப் பறிக்க முனைகிறார் நேரு!

பெண்கள் எல்லா வேலைகளுக்கும் தகுதி உடையவர்கள்; ஆனால் ......!

“நான், பெண்களுக்கான உரிமைகளை ஒப்புக் கொள்வதிலோ, அவர்களுக்குப் போதிய முக்கியத்துவம் அளிப்பதிலோ தக்க மதிப்பளிக்கத் தயாராக இருக்கிறேன்; ஆனால், அவர்களுக்கு சில கட்டுப்பாடுகள், ஒரு குறிப்பிட்ட சர்வீசுகளைப் பொறுத்த மட்டிலுமாவது இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.”

—என்று, பண்டித நேரு, இந்திய மேல்சபையில், பெண்களின் நிர்வாகப் பதவிகள் பற்றிய சர்க்காரின் விதிமுறைகளை ஆதரித்துப் பேசுகையில் கூறினார்.

விவாதத்தின் இடையே குறுக்கிட்டு அவர் பேசியதாவது:—

“நான், உண்மையாகச் சொல்லுகிறேன்: இந்திய நாட்டு பெண்கள் சிறந்தவர்கள்; மாண்புமிக்கவர்கள்—நமது நாட்டுப் பழங்கால பெண்திலகங்களை மனதில் கொண்டு இதைக் கூறவில்லை; இன்று நாட்டிலே உள்ள வாழ்க்கை முறைகளையும், வேலைத் தரத்தையும் மனதில் கொண்டே சொல்லுகிறேன்—அவர்கள் எந்தவிதமான வேலையையும் செய்யத் தகுதி பெற்றவர்கள்.

நீங்கள், என்னை உடனே ஏராளமான பெண்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றால் நான் திகைத்துப் போவேன். தந்து வார்த்த முறையில் நான் பதில் கொடுக்க இயலாது போகலாம்; ஆனால், உண்மை நிலைமைகளும், பெண்களின் உடல் அமைப்புகளும், குறுக்கே வந்து நிற்கின்றன.

நான் பழைய சமூகச் சட்டங்களால் பிணைக்கப்படுவதை உணரவில்லை. உண்மை என்னவென்றால் பொது வாழ்க்கையில் வருகிற ஒவ்வொரு பெண்ணும் ஏராளமான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அது பெண்களின் குற்றமல்ல; ஆண்களின் குற்றமே!

பெண்கள் எல்லாவிதமான பேச்சுக்களையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. போதுமான வன்மையிருந்தால் அவர்கள் வெற்றியடைகிறார்கள்; இல்லையேல், எதிர்ப்புகளினால் தோல்வி அடைந்துவிடுகின்றனர்.

நீங்கள் ஏற்படுத்துகிற கடுமையான சட்டங்கள் மட்டும் தொல்லை தருகின்றது என்று கூறுவது இயலாது. பொது வாழ்க்கையிலும் விஞ்ஞான பகுதியிலும், இதுபோன்ற நிலைமைகளைப் போக்க வேண்டும்.

சட்டத்தின் மூலம் பெண்களின் உரிமைகளைப் பெறுவது என்பதைவிட சமூக வாழ்க்கையிலேயே இதைப் பெற முயல வேண்டும்.”

‘தேனீவீரர்’ தியாகராசனுக்கு கிடைத்த மரியாதை!

பொதுவுடைமையினர் ஆத்திரத்திற்கு இலக்கானார்

மதுரை, செப் 27—

மதுரையை அடுத்த சின்னமனூருக்கு அருகேயுள்ள சீலையம்பட்டியில், மதுரை மாவட்டக் கழகத்திற்கு காங்கிரஸ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கும் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மதுரை மாவட்டக் கழகத்தின் முன்னாள் தலைவர் திரு. என். ஆர். தியாகராசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திலிருந்து தனக்கு எதிர்ப்புக் கிளம்புகிறது என்பதை முன்கூட்டியே அறிந்த தியாகராசன், கூட்டம் முடிவு முன்பே கூட்டத்திலிருந்தும் வெளியேறித் தப்பிவிட முயற்சித்தார்.

அந்த நேரத்தில் பொதுவுடைமை கட்சி அனுதாபமுடையவர்கள் எனக் கூறப்படும் பலர் ஆர்ப்பாட்டம் செய்து, தியாகராசன் மீது கல்லையும், மண்ணையும் வாரி இறைத்தனர் என்றும், தற்செயலாக அவ்வழியே சென்ற பஸ் ஏறி, பலத்த காயங்கள் ஏதுமின்றி, தப்பிதோம், பிழைத்தோம் என்று போய்விட்டாராம்.

நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில், பொதுவுடைமையினர் ஆதரித்த ஒரு சுயேச்சை உறுப்பினர் தோல்வி அடைந்ததே சம்பவத்திற்குக் காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

தூதுவர்!

விதிகளைப் புறக்கணித்து நடந்துகொண்ட புதுமை!

லண்டன் இந்திய ஸ்டோர்ஸ் இலாகாவின் ஒழுங்கீனம்

பொது கணக்குக் குழுவின் கண்டனம்

பண்டிதரின் தலைமையில் உள்ள வெளிநாட்டிலாகா, ‘ஊழல்களின் கூடாரமாக விளங்குகிறது,’ என்ற கருத்து, நாள்தோறும் வலுப்பட்டு வருகிறது. மக்களின் வரிப் பணத்தைப் பாழாக்குவது மட்டுமின்றி, வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் பல நடைமுறை விதிகளுக்குப் புறம்பாக நடப்பது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

இந்தியாவிற்குத் தேவையான பொருள்களை வாங்குவதில் ஒரு தட்வை மட்டுமல்ல; பல சந்தர்ப்பங்களில் லண்டனில் உள்ள இந்திய சர்க்கார் ஸ்டோர்ஸ் இலாகா ஒழுங்கு தவறி நடைமுறை விதிகளுக்குப் புறம்பாக நடந்துகொண்டிருக்கிறது என்று பொது கணக்குக் குழு கண்டித்திருக்கிறது.

★

இந்திய மக்கள் சபையின் பொது கணக்குக் குழு, லண்டனில் பணியாற்றிய இந்திய ஹைகமிஷனர் (வி. கே. கிருஷ்ண மேனன்) உரம் வாங்கிய முறை தவறானது என்று எடுத்துக் காட்டியுள்ளது.

சென்பாங்க் கம்பெனியாரிடம் உரம் வாங்குவதில் அதிகாரிகள் விபரீதமாக, ஒழுங்கீனமாக நடந்துகொண்டது சரியல்லவென்றும், ஆனால், இதுபோன்ற ஒழுங்கீனங்கள் நடைபெறுவது இது ஒரே ஒரு சம்பவம் அல்லவென்றும் குழு கண்டித்துள்ளது.

ஆயிரம் பவுன்கள் மட்டுமே மூலதனம் உள்ள கம்பெனி ஒன்றின் 90 லட்சம் பவுன்கள் மதிப்புள்ள பொருளுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளும் போக்கு மிகவும் ஒழுங்கு மீறிய செயல் என்று பொது கணக்குக் குழு எடுத்துக் காட்டியுள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற ஒப்பந்தங்கள் அதற்கென அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மூலமே நடைபெற வேண்டுமென்றும், இம்முறையிலிருந்து மாறுபட்டுச் செல்ல வேண்டுமென்றால் அதற்கான தக்க ஆதாரங்களுடன், தகுதி பெற்ற அதிகாரியின் ஒப்புதலுடனும் நடைபெற வேண்டுமென்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

உரம் வாங்கியது பற்றியும், ரஷ்யாவிலிருந்து அமோனியம் சல்பேட் வாங்கியது பற்றியும் விசாரணை செய்ய மத்திய சர்க்கார், நீதிபதி ராஜாதியக்ஷாவை நியமித்தனர்.

ரஷ்யாவில் உள்ள இந்திய தூதுவர்தான் அமோனியம் சல்பேட் பற்றிய பேரங்களுக்கு சரியான தகுதி பெற்றவர் என்றும், இவர் மூலமாகத்தான் பேரம் நடைபெற்றிருக்க வேண்டுமென்றும், ஆனால், இந்த முறைக்கு மாறுபட்டு வியாபாரம் நடத்தப்பட்டிருக்கிறது என்றும், கணக்கு குழுவினர் சுட்டிக் காட்டியுள்ளனர். நிரந்தரமான விதிமுறைகளை இத்துறையில் அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. வெளிநாட்டு வியாபாரம் பற்றிய பிரச்னைகளில் இப்போக்குதான் காணப்படுகிறது என்று குழுவினர் மேலும் கூறியுள்ளனர்.

பொது கணக்குக் குழுவின் 12-வது அறிக்கையை விவாதிக்கும்போது மேல்சபை உறுப்பினர் சுந்தரய்யா, சர்க்கார் இதுபோன்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளை நிராகரிப்பது மட்டுமின்றி, மக்களின் விருப்பத்திற்கும் மாறாக நடப்பது கூடாது என எச்சரித்தார்.

நேபாள மந்திரிசபையில் நெருக்கடி!

வெளியேறுவேன் என பிரதமர் பயமுறுத்துகிறார்

காட்மண்டு, செப். 28—

நேபாளப் பிரதமர் எம். பி. கொய்ராலா பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், மந்திரிசபையில் கருத்து வேற்றுமைகள் நிலவுகிறதென்றும் இந்த நிலை மாறாவிட்டால், தான் பதவியை விட்டு வெளியேற நேரிடுமென்று நேபாள மன்னரிடம் தான் கூறியதாகவும் அறிவித்தார்.

நேபாள மன்னர், மந்திரிசபை உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் கருத்து வேற்றுமைகளைத் தன் முன்னைவக்க வேண்டுமென்று கோரியிருக்கிறாராம். இந்தக் கருத்து வேற்றுமைகளைப் போக்க என்ன செய்யலாமென்பதையும் தனக்கு யோசனை கூறுமாறு மன்னர் கேட்டிருக்கிறாராம்.

நேபாள மந்திரிசபையின் எதிர்காலம் பற்றி மன்னர் இந்தியாவுக்குச் செல்லு முன்னதாக ஒரு முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

இந்திய சர்க்கார் சப்ளை இலாகா அதிகாரிகள், 1952—1953-ம் ஆண்டில் பகிரங்கம் செய்த கண்ட்ராக்டுகளாகக் கொள்ளப்பட்ட தந்தியின் நடைமுறைப்படி 55,409 டோனையும், 21,770 டோனையும் ருசு

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 29—9—54 புதன்

அட்லி வீசிய அணுகுண்டு!

பிரிட்டனின் முன்னாள் பிரதமராக இருந்த கிளிமெண்ட் அட்லி உலக நடைமுறையை நுணுகி ஆராய்ந்து அறியாதவரென்றோ, சிறந்த முறையில் ஆட்சி புரியத் தெரியாதவரென்றோ, பொதுவுடைமை நாடுகளின் நடைமுறையையும், முதலாளித்துவ ஜனநாயக முறை நாடுகளின் நடைமுறையையும் அறியாதவரென்றோ, எவருக்கும் கூறத் துணிவு பிறக்காது. பிரிட்டிஷ் அரச தந்திரிகளில் தலைசிறந்த சிலருள் அவரும் ஒருவர் என்பதையும், ஜனநாயக சமதர்மக் கோட்பாட்டை சிறுகச் சிறுக வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நல்லறிவும் நல்லெண்ணமும் கொண்டிருப்பவர் என்பதையும் உலகம் அறிந்தே இருக்கிறது. தாம் பிரிட்டிஷ் பிரதமரானவுடன், இந்தியத் துணைக் கண்டத்திற்கு உடனடியாக சுதந்திரம் வழங்கியதைக் கொண்டே, அட்லியின் அரசியல் நிபுணத்துவத்தை எடுத்து விளக்குவதற்குப் போதுமானதாகும்.

இன்று அவர் பிரிட்டிஷ் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து வருகிறார். இங்கிலாந்து மக்களின் பெரும்பான்மையினர் விரும்பினால், நாளையே அவர் மீண்டும் அந்நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்து வருகிறார். அத்தொழிற் கட்சித் தலைவரான அவர், தமது கட்சித் தோழர்களுடன் சோவியத் ரஷ்யாவிற்கும், நவ சீனாவிற்கும் சுற்றுப்பயணம் சென்றுவிட்டு தாய்நாடு திரும்பி இருக்கிறார்.

அட்லி தலைமையில் அத்தொழிலாளர் குழு சோவியத் நாட்டிற்கும், புது சீனாவிற்கும் சென்றதை இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள கன்சர்வேடிவ் கட்சியினர் விரும்பவில்லை. அமெரிக்காவிலும், அந்நிலைப் பயணத்திற்கு ஆதரவு இருக்கவில்லை என்பது எடுத்துச் சொல்ல வேண்டியதல்ல. அவ்விஜயத்தால் அமெரிக்காவில் அதிருப்தி ஏற்பட்டது இயல்பேயாகும்.

அட்லியின் தூதுக் குழு, மாஸ்கோவின் ஆட்சித்தலைவர்களை சந்தித்து அளவளாவி இருக்கிறது; [illegible] கண்டும் இருக்கிறது. அதே போன்று புதிய சீனத்திற்கும் சென்று, அங்கு இன்று மக்கள் பெற்றுள்ள புதிய நம்பிக்கைகளைக் கண்டு கருத்துத் தெளிவும் பெற்றிருக்கிறது.

சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு சொந்த நாடு திரும்பும்போது வழியில், கிளிமெண்ட் அட்லி, முன்பு கொட்டு முழக்கோடு தெரிவிக்கலாம், சீன மக்களால் விரட்டியடிக்கப்பட்டு பார்மோசா தீவில் ஒழுந்து வாழ்க்கை பெற்று அமெரிக்க உதவி கொண்டு சண்டை செய்து கொண்டு கொடுமையான சியாங்-கே-ஷேக்கின் கோரமான கோட்பாட்டைக் குறித்து, இடைக்காலமாகத் தமது எண்ணத்தை வெளியிட்டுள்ளார். அதாவது, 'சியாங்-கே-ஷேக்கையும், அவரது பட்டாளத்தையும் எவ்வளவு விரைவில் நாம் தொலைத்துக் கட்ட முடியுமோ அவ்வளவும் நன்மை தரக் கூடியதாகும்' என, அட்லி அறிவித்துள்ளார். அதனுடன் கிழக்கு ஆசியப் பகுதியின் அமைதி நிலைபெறும் எனவும் அவர் கூறியுள்ளார். அதைக் கேட்டு இங்கிலாந்தில் உள்ள அரசியல் மந்த மதியினர் ஆத்திரப்படுகின்றனர். அதற்குமேல் அமெரிக்கர்களின் பெரும்பான்மையினருக்கும் அதிகாரவர்க்கத்தினருக்கும் ஆத்திரமும் அதிருப்தியும் அட்லி கருத்தின் இருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை.

ஊழல் மிகுந்த ஆட்சியும், வைராக்கியத்திற்கும் சியாங்-கே-ஷேக்கும் அவர் தம் சகாக்களும் பெயர் போனவர்கள் என்பதை உலகம் ஏற்கெனவே அறிந்தே இருக்கிறது. அவருடைய ஊழல் மிகுந்த ஆட்சி வலை ஆழம் காலம் சீனாவில் நடைபெற்று வந்ததற்குக் காரணமே, சீனாவிற்கு ஜப்பான் கொடுத்த அதாகவேயும், அமெரிக்காவின் மக்கமலமுமே யாகும். ஜப்பான் சிரழித்ததும், முன்னிலும் மண்மடங்கு அதிகமாக அமெரிக்காவின் பலமும் பணபலமும் சியாங்கிற்குக் கிடைத்தும் கூட, சீன மக்களுக்கு எதிராக சியாங் அக்கிரம ஆட்சி நீடித்து நிலைபெற முடியாமல் போய்விட்டது. சீனாவின் இருந்து சியாங் ஆட்சி விரட்டி அடிக்கப்பட்டது. முறியடிக்கப்பட்ட சியாங், தமது சிதறியோடிய சேனையின் எஞ்சிய சிறுபகுதியுடன் கூட்டிக்கொண்டு, சீனாவை அடுத்துள்ள சீனாவிற்குச் சொந்தமான பார்மோசா தீவில் கொக்கரித்துக் கொண்டு இருக்கிறார். அக்கொக்கரிப்பு அமெரிக்காவின் ஆதரவாலும் ஊக்கத்தாலும் இன்றும் நிலைபெற்று இருக்கிறது. அமெரிக்காவின் ஆயுத பலமும் டாலர் பலமும் நிறுத்தப்பட்டாலும், சியாங் தூக்கியெறியப்பட வேண்டும். அன்றைய தேற்று நாட்டின் அதிபரைத் தஞ்சம் புக வேண்டும்.

ஆனால், அமெரிக்க உதவியின் காரணமாக சுமார் 1 கோடி சீன மக்கள் இன்று பார்மோசாவில் இருந்து வருகின்றனர். அவர்களில், சியாங் சிறுவனை விட்டு ஓடி வரும் பொழுது தம்முடன் வந்த பதினோரு லட்சம் சீனர்களும் உள்ளனர்.

அமெரிக்க ஆதரவால் பார்மோசா இன்று ஒரு பலமிக்க கடற்படைத் தளமாக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இராணுவ முகாம் லட்சம் இருப்புகளோடு கொண்ட இராணுவம் இன்று சியாங்கிடம் இருந்து வருகிறது.

சீன மக்கள் சியாங் ஆட்சியை விரும்பாமல், சியாங்கை கங்கையிட்டு விரட்டியடித்தவுடன், அறுபது கோடி மக்களைக் கொண்ட புதிய சீனாவை ஐக்கிய நாடு சபையில் இடம் பெற அமெரிக்கா ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால், ஜனநாயகம் பேசுகிற அமெரிக்கா, அறுபது கோடி மக்களுக்கு ஐக்கிய நாடு சபையின் பிரதிநிதித்துவம் கொடுக்காது, ஒரு கோடி மக்களை மட்டுமே கொண்டுள்ள பார்மோசாவின் தலைமையாகப் பதுங்கிக்கிடக்கும் சியாங்கின் கொள்ளைக் கூட்டத்திற்கு ஒரு ஆட்சி அமைப்பு எனப் பெயரிட்டு, அதற்கு ஐ. நா. சபையில் இடமும் கொடுத்திருக்கிறது. அத்தவறைத் திருத்திக் கொள்ள, இதுமேல் இடைக்காலத்தை அமெரிக்கா மறுக்கிறது. சென்னை நெருக்கம் உள்ள அளவு அமெரிக்காவிடம் அரசியல் தந்திரம் இழுபறியாகச் சொல்வதற்கில்லை.

எந்த நேரமும் வெடிக்கக் கூடுமென விழிப்போடு நோக்கிக் கொண்டிருக்க வேண்டிய பயங்கரமான எரிமலையாக பார்மோசா இருக்கும்வரையும், அமெரிக்காவின் போக்கில் பொறுமை காட்டுவோர், நம்பிக்கையை வைக்கவோ புதிய சீனாவால் எவ்வாறு முடியும்? எனவே, பிரிட்டிஷ் எதிர் கட்சித் தலைவரான கிளிமெண்ட் அட்லி சியாங்—கே—ஷேக் [illegible] ஒழிக்க வேண்டும் எனக் கூறியிருப்பது மிகவும் பொருளுடையதாகும்.

பார்மோசாவின் இருந்து சியாங் கூட்டத்தை வெளியேற்ற அமெரிக்காவின் உள்ள எதாவது ஒரு ஆசோசிய நிலைக்கு குடியேற்றப்பட்டாலும், மூன்றாவது உலகப் போர் மூளாமல் தடுத்துவிட முடியுமா என்றால், அடிப்படைக் குலைப்பதில் முரண்பாடு கொண்டு உருவாகி வளர்ந்திருக்கும் வல்லரசுகளிடை, அணுகுண்டும் நீர்வளிக்குண்டும் விதவிதமான போர்க்கருவிகளும் மலைமலையாகக் குவிந்து கிடக்கும் நிலையில், ஒருக்காலும் தடுத்துவிட முடியாது என்றுதான் அறிஞர்கள் முடிவிற்கு வருவர்.

குவிந்து கிடக்கும் போர்க் கருவிகளால் வல்லரசுகளுக்குள் ஏற்பட்டுள்ள அச்சம் நீங்குவதற்கு முதல் முதலாக வழிவகை காணவேண்டும். அதற்கு அட்லியின் கருத்துரை, ஒரு நல்ல துவக்கமாகும் என்பதை அமெரிக்க அதிகாரிகள் உணர்ந்து, பார்மோசாவிற்குப் பக்கபலமாக இருப்பதை உடனடியாக விட்டொழிக்க வேண்டும். அதனால் அமெரிக்காவிற்கு நேரடியாக ஏற்படப்போகிற நட்டம் எதுவும் கிடையாது. அதற்கு பதிலாக இலாபம் உண்டு. மற்ற ஜனநாயக நாடுகளின் அறநெறி பலம் அமெரிக்காவிற்கு ஏற்படுவதற்கு அது ஒரு சிறந்த ஏற்பாடாக அமையும்.

அட்லியின் அறிவுரையை ஏற்க மறுத்து, அமெரிக்கா முன்போலவே சீன விஷயத்தில் பிடிவாதம் காட்டி, பார்மோசாவைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்குமானால், மூன்றாவது உலகப் போர் முளைவது, அதுவும் இன்றி ரண்டு ஆண்டுகளுள் ஏற்படுவது நிச்சயத்திலும் நிச்சயமாகும். அத்தகைய பொதுவுடைமைப் பாவனைத் தடுத்து ஒழிக்கவே அமெரிக்கா கத்திக் கொண்டு இருக்கிறதே, அதில் முழுத் தோல்வி அமெரிக்கா பெறும் என்பதோடு, தானும் அதற்குப் பலியாகும் ஒரு நிலை விரைவில் ஏற்பட்டுவிடும் என்பதிலும் ஐயமில்லை.

அட்லியின் எச்சரிக்கையை அணுகுண்டென அமெரிக்கா மதிக்கப்போகிறதா, அல்லது உலக நலத்தில் அக்கறை கொண்ட நல்லறிஞர் கூறிய அறிவுரையாகக் கொள்ளப் போகிறதா என்பது போகப் போக வெளிச்சமாகிவிடும்.

கதிர் இயக்க அணு எதிர்ப்பு

பிரிட்டிஷ் கடற் படை இரகசிய சோதனை நடத்தியது

அணு குண்டு பரிசோதனையின் விளைவினால், பிரிட்டன் தனது கப்பல்களுக்கு சேதம் எதும் நேராமல் பாதுகாப்பதில் மிகுந்த கவலை காட்டுகிறது என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் கடற்படையினர் கதிர் இயக்கப் பொருள்களினால் கப்பல்களுக்கு ஏற்படும் அழிவு ஏதேனும் உண்டென்றால் அதை தடுப்பதற்கான பரிசோதனைகள் நடத்தியதாகத் தெரிகிறது.

சென்ற ஆண்டில் பிரிட்டனின் கடற்படை ரகசியமாக ஆரம்பித்து இந்த மே திங்களில் நடைபெற்ற பரிசோதனைகள் மத்திய தரைக் கடலில் முடிவுற்றன என்று தெரிகிறது.

இப்பரிசோதனைக்கு 10 000 டன் எடையுள்ள 'கம்பர்லண்ட்' என்ற பெயர் உள்ள குரூஸர் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

இப்பரிசோதனைகள் மிகவும் இரகசியமாக நடைபெற்றதாகவும், அவை வெற்றிகரமாக முடிவுற்றன என்றும் தெரிகிறது.

அரிசி நெருக்கடி தீர்ந்தது!

யுத்தத்தினால் கொரியாவும், இந்தோ-சீனாவும் பாதிக்கப்பட்டாலும், அவைகளைப் பார்த்தால் இவ்வாண்டில் தென் கிழக்கு ஆசியாவில் அரிசி உற்பத்தி பெருகியிருக்கிறது. யுத்தத்திற்கு முன்பு பர்மா, தாய்லாந்து, இந்தோ-சீன நாடுகள் அரிசியை ஏற்றுமதி செய்து வந்தன. சீனாவும், ஜப்பானும், இந்தியாவும் இறக்குமதி செய்தன.

இவ்வாண்டில், இந்தியாவின் உபரியாகிறது; இருந்தாலும் ஆண்டுத் துவக்கத்தில் டன் ஒன்றுக்கு 48 பவுன் விலையில் ஏழு லட்சம் டன் அரிசியை பர்மாவிடமிருந்து வாங்க இந்தியா ஒப்பந்தம் செய்திருப்பதை மதித்து நடக்கும்.

1945 லிருந்து அரிசி ஏற்றுமதி வியாபாரம் பர்மாவிடமும், தாய்லாந்திடமுமே மிகுந்து வருகிறது. அரசாங்க ரீதியில் ஒப்பந்தம் செய்துகொண்டு இவை வியாபாரம் செய்கின்றன. இப்போது அரிசி விலை குறைந்துவிட்டது என்றாலும், இப்போதைய நிலையே யுத்தத்திற்கு முன்பிருந்ததைவிட பத்து மடங்கு அதிகமாகும். ஆகவே, பல ஆசிய [illegible] நேரடியாக மாவு கொள் முதல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இதனால் அரிசி வியாபாரம் ஓரளவு பாதிக்கப்படும். மேலும் இவ்வாண்டில், பர்மாவில் அரிசி கையிருப்பு அதிகமாகிவிட்டது. ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் ஆகியவைகளில் வெள்ளப்பாழ் ஏற்பட்டிருப்பதால் அரிசிக்கு ஓரளவு கிராக்கி ஏற்படக்கூடும்.

தன்னுடைய அரிசிக்கு இலங்கை ரப்பரை பண்டமாற்றுச் செய்ய சீனா விரும்புகிறது. இப்போதுள்ள நிலையில் பார்த்தால் எதிர்காலத்தில் அரிசி சுபீட்சமாகவிருக்குமெனத் தெரிகிறது. இதனால் பர்மாவிலும், தாய்லாந்திலும் ஏற்றுமதிப் பிரச்னையும் பொருளாதாரச் சிக்கலும் ஏற்படக்கூடும் என்றாலும் விவசாயிகள் சுபீட்சமாக வாழமுடியும்.

இந்திய சர்க்கார், நாட்டின் சர்க்கரை ஆலைகளில் 1953—54-ம் பருவத்திய உற்பத்தியிலிருந்து, மேற்கொண்டு 61,000 டன் சர்க்கரையை தாராள விற்பனைக்கு இப்பொழுது விடுவித்திருக்கின்றனர்.

இந்திய—சீன வர்த்தக ஒப்பந்தம்

அடுத்த வாரம் கையெழுத்தாகும்

இந்தியாவிற்கும்—சீனாவிற்கும் இடையே நடைபெறும் வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக நடைபெறுகின்றன என்றும், அடுத்த வார இறுதியில் ஒப்பந்தம் கைபெழுத்தாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற ஆண்டு செய்துகொண்டதும் வர்த்தக ஒப்பந்தம், இந்தியா மற்ற நாடுகளுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம்போன்றது தான் இருக்குமென்றும், இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் உள்ள பொருள்களே ஒப்பந்தத்தில் இடம் பெறும் என்றும் தெரிகிறது.

பண்டமாற்று முறைக்கு இந்திய சர்க்கார் விரோதமாக இருக்கின்றனர் என்றும், அந்த முறையிலிருந்து அவர்கள் மாறமாட்டார்கள் என்றும் தெரிகிறது.

இந்தியாவில் வெளிநாட்டு முதலீடு!

1953 ஏப்ரல் முதல் 1954 ஜூன் வரை இந்தியாவில், வெளி நாடுகளிலிருந்து 162 66 லட்சம் ரூபாய்கள் மூலதனமாகப் போடப்பட்டுள்ளன.

அதே காலத்தில் இந்தியாவில் இருந்த வெளிநாட்டுக் கம்பெனிகள் மூலதனத்தைப் போன்ற வகையில் 85 24 லட்சம் ரூபாய், வெளியேறியிருக்கிறது.

இத் தகவலை இன்று ராஜ்ய சபையில் உதவி நிதி மந்திரி ஷா வெளியிட்டார்.

முதலீடு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பணம் கீழ்க்கண்ட விகிதாச்சாரத்தில் இருக்கிறது.

இங்கிலாந்து ரு 137 85 லட்சம், அமெரிக்கா 1 90 லட்சம், சுவிட்சர்லாந்து 22 15 லட்சம், பிரான்ஸ் 0 39 லட்சம், இலங்கை 0 27 லட்சம், டென்மார்க் 0.80 லட்சம்.

மெகார்தியை அமெரிக்க செனட் விசாரிக்கும்!

வாஷிங்டன், செப். 27—அமெரிக்க செனட் சபையின் தனி விசாரணைக் குழு ஒன்று செனட்டர் மெகார்தியை செனட் சபையினால் விசாரணை செய்யப்படவேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளதாம்.

சீனமக்கள் குடியரசு தலைவர்

மா-சே-துங் தேர்ந்தெடுக்கப்பட்டார்

சூ-என்-லாய் பிரதமராக நியமனம்

சீன மக்கள் குடியரசின் தலைவராக மா-சே-துங் தேசிய மக்கள் காங்கிரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இதற்கு முன்னர் மா-சே-துங் மத்திய மக்கள் சர்க்கார் குழுவின் தலைவர் என்று அழைக்கப்பட்டார்.

சீனாவின் புது அரசியல் சட்டப்படி மா-சே-துங்கிற்கு இப்புதிய தலைமைப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் அமைப்பின்படி பார்த்தால், சீன மக்கள் குடியரசின் தலைவர் பதவி அலங்கார மான பதவி அல்ல; அதிகமான அதிகாரங்களை உடைய பதவியாகும்.

மா-சே-துங் தான் இப்போதும் கம்யூனிஸ்டு மத்தியக் குழுவின் தலைவராக இருக்கிறார். புதிய அரசியல் அமைப்பினால் மா-சே-துங்கின் நிலைமையில் மாற்றம் ஏற்படுமோ என்பதை இப்போதே கூறுவது கடினமாகும்.

புதிய அரசியல் அமைப்பின்படி முக்கிய அதிகாரங்கள் அனைத்தும், தேசிய மக்கள் காங்கிரசின் நிரந்தரக் குழுவின் தலைவரிடம் இருக்குமென்று தெரிகிறது. அவர் இன்னும் தேர்ந்தெடுக்கப் படவில்லை.

குடியரசின் தலைவர் தேசிய மக்கள் காங்கிரசின் முடிவிற்கு இணங்கவோ, அல்லது அச்சபையின் நிரந்தரக் குழுவின் முடிவுகளுக்கு ஒப்பவோ காட்டிற்கு தேவையான சட்டங்களையும், உத்தரவுகளையும் பிறப்பிப்பார் என்று தெரிகிறது.

குடியரசின் துணைத் தலைவராக சூ-டே தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியல் சட்டத்தின் விதிகளின்படி மா-சே-துங், சௌ-என்-லாயை குடியரசின் பிரதமராக நியமனம் செய்திருக்கிறார். இந்த நியமனத்தை தேசிய சீன மக்கள் காங்கிரஸ் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. மேற்படி சபையின் நிரந்தரக் குழுவின் தலைவராக லியூ-சாவோ-சி என்பவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

மா-சே-துங்கின் தேர்தல் ஏகமனதாகவும், இரகசிய வாக்கு சீட்டின் மூலமும் நடைபெற்றதாம்.

பட்டாசு வெடிக்குத் தடை

'அணுகுண்டு', 'பட்டுடியா' ஆகிய இரண்டு ரகங்களைச் சேர்ந்த பட்டாசு வெடிகளைத் தயாரிப்பதற்கும், கையிருப்பில் வைத்திருப்பதற்கும், உபயோகிப்பதற்கும் இந்திய சர்க்கார் இப்பொழுது தடை விதித்திருக்கின்றனர்.

'அணுகுண்டு' வெடிகள் வெடி மருந்துகள் கொண்ட பட்டாசு ரகத்தைச் சேர்ந்தவை. இவை காகிதத்தினால் சுற்றப்பட்டு, மெல்லிய நூலினால் கட்டப்பட்டிருக்கும். இந்த ரகத்தைச் சேர்ந்த பெரிய பட்டாசுகள் வெடிக்கும்போது பலத்த சத்தம் உண்டாகும்; அவை வெடிக்கையில், அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குக் காயம் ஏற்படக்கூடும்.

'புட்புடியா' என்ற ரகத்தைச் சேர்ந்த பட்டாசு வெடிக்கு, 'டார்படோ', 'பிட்பிதயா', 'சடபட', 'பட்டாசுப் பூச்சி', 'ஹாக்வா' என்ற பெயர்களும் உண்டு; அவற்றில் விஷம் கலந்த மஞ்சள் நிற கந்தகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. 'புட்புடியா' பட்டாசு வெடிகளில் ஒன்றை குழந்தைகள் தப்பித் தவறி விழுங்கிவிட்டால் உயிருக்கே ஆபத்து நேரிடலாம்.

ஆந்திர மதுவிலக்குக் கொள்கை

கே. எல். பி. குழுவினரின் நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

மதுவிலக்கு சம்மந்தமாக ராம மூர்த்தி கமிட்டியின் சிபார்சை பற்றி ஆந்திர சட்ட சபை செய்த முடிவை ஆந்திர சர்க்கார் அமுல் செய்யத் தவறியதன் காரணமாக, ஆந்திர சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை, சட்ட சபை கூடியதும் கொண்டு வருவதென்று, கட்சி நிர்வாகக் குழு தீர்மானித்திருக்கிறதாம்.

மேலும், ஆந்திர சர்க்கார், தனது தற்போதைய கொள்கையை மாற்றும் வரையில், கடந்த 2 மாதங்களாகத் தொடர்ந்து நடந்துவரும் கள்ளிறக்குவோர் சத்தியாக்கிரகத்தை நீடித்து நடத்த முடிவு செய்திருப்பதாகவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

பர்மா-இந்தோனேஷியப் பிரதமர்கள் பேச்சுவார்த்தை

ரங்கூன், செப். 28—

இந்தோனேஷியப் பிரதமர் டாக்டர் அலி சஸ்திரோமிட்ஜோஜோவுக்கும், பர்மியப் பிரதமர் யூ-நுவுக்கு மிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில், தென் கிழக்கு ஆசிய இரு நாடுகளுக்கும் பொதுவான சிரத்தையுள்ள விஷயங்கள் பல இடம் பெற்றுள்ளன என்று தெரியவருகிறது.

'சீட்டோ' பற்றியும், சூ—நு, சூ—நேரு அறிக்கைகள் பற்றியும், ஆசிய—ஆப்பிரிக்க மகாநாடு கூட்டுவது பற்றியும் அவர்கள் விவாதித்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

சோக்கலால் உயர்நிலைப் பள்ளி

புதிய கட்டிடத் திறப்பு விழா

முக்கூடல் திரு. த. பி. சொ. அர்ராம் சேட் அவர்களால் சுமார் ரூ 60,000 செலவில், சொக்கலால் உயர்நிலைப் பள்ளிக்காகக் கட்டி முடிக்கப்பட்ட மாடிக் கட்டிடத்தை நெல்லை மேற்கு மாவட்டக் கல்வி அதிகாரி ஆர். பெருமாள் திறந்து வைத்தார். அதுபோது பள்ளியின் ஸ்தாபகரான திரு. த. பி. சொக்கலால் ராம்சேட் உருவப் படத்தை அம்பைப் பகுதி கல்வி அதிகாரி வெங்கடாசலம் பெருமாள் திறந்து வைத்தார். பின்னர், திரு அர்ராம்சேட் தேனீர் விருந்தளித்தார்.

உயர்தரப் பள்ளிகளில் ரேடியோ சாதனங்கள்

அகில இந்திய ரேடியோவின் பள்ளிச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளை, ஐதராபாத மாகில கல்வி இலாக்காவினர் பள்ளிப் பாடத் திட்டத்தில் இணைத்திருப்பதினால், அந்த மாநிலத்திலுள்ள 150 உயர் நிலைப் பள்ளிகளிலும், இவ்வாண்டு நவம்பர் இறுதி முதல் ரேடியோ சாதனங்கள் கட்டாயமாக வைக்கப்படுமென்று தெரிகிறது.

1953-ம் ஆண்டில், இந்தியாவில் உற்பத்தியான சாதனைகளின் எண்ணிக்கை சுமார் 21.3 லட்சம் ஜோடி; 1952-ல் உற்பத்தியானது 18 லட்சம் ஜோடி.

திருவாங்கூர் தமிழர்கள்

90 பேர் ஜாமீன்மனுக்கள் தள்ளுபடி

கீழ்க்கோர்ட்டில் தாக்கல் செய்யுமாறு யோசனை

திருவனந்தபுரம், செப். 27—

திரு—கொச்சி உயர்நீதி மன்றத்தின் நீதிபதி கே. சங்கரன் நாயர் ... பிள்ளை அண்மையில் தென் திருவாங்கூரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள தொழிலாளர் 99 பேர் தங்களை ஜாமீனில் விடுமாறு கோரி செய்துகொண்ட மனுவில் ஒன்பது மாணவர்களுக்கு மட்டும் ஜாமீன் அளித்து மற்ற 90 பேருடைய மனுக்களை நிராகரித்தார்.

ஜாமீனில் விடுவிக்கப்பட்ட ஒன்பது பேரும் மாணவர்கள். வழக்கமாக ஜாமீன் மனுக்கள் எல்லாம் கீழ்க் கோர்ட்டுகளில்தான் முதலில் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும், தவிர்க்க முடியாத சில காரணங்களை ஒட்டித்தான் நேரடியாக உயர்நீதி மன்றத்திற்கு மனுச் செய்துகொள்ள வேண்டுமென்றும், இந்த மனுக்களைப் பொறுத்தமட்டில் அப்படிப்பட்ட பிரத்தியேக நிலை ஏதும் இல்லை என்றும், ஆகவே இவர்கள் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஜாமீன் மனுவைத் தாக்கல் செய்யவேண்டுமென்றும், நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

இதே நபர்கள், தங்கள் செஷன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்களை செஷன்ஸ் நீதிபதி நிராகரித்தது சரிதான் என்று நீதிபதி தனது தீர்ப்பில் மேலும் கூறினார்.

இரு விமானங்கள் மோதின

7 பேர் கொல்லப்பட்டனர்

அமெரிக்கக் கடற்படை விமானம் ஒன்றும் [illegible] பின் [illegible] மும் சான்டிமூர் துறைமுகத்தில், ஆகாயத்தில் மோதின. இரு விமானங்களும் சுக்கு நூறாக நொறுங்கின. கடற்படை விமானத்திலிருந்த ஆறு பேரும், வேட்டை விமானத்திலிருந்து ஒருவருமாக ஏழு பேரும் கொல்லப்பட்டனர். அவர்களுடைய உடல்கள் சிறு துண்டங்களாகக் கண்டெடுக்கப்பட்டனவாம்!

சீனாவில் வேலையில்லாத் திண்டாட்டம்

பெரும் அளவில் இருக்கிறதாம்!

கம்யூனிஸ்டு சீனாவில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் கடுமையாக இருக்கிறது என்று பிரதமர் சூ-என்-லாய் தேசிய மக்கள் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சர்க்கார், மற்றும் தனிப்பட்டோர் இவர்களிடம் மொத்தமாக சீனாவில் 1,37,45,000 தொழிலாளர்கள் உள்ளனர் என்று தெரிகிறது.

இதைக் குறிப்பிட்ட சூ-என்-லாய் பேசுகையில் இவ்வளவு தொழில் வளமையிருந்தும், மக்கள் தொகையின் பெருக்கத்தினால் தொழில் பெருக்கம் ஏற்படவில்லை என்றும், இப்பிரச்னை [illegible] காலத்திற்கு இருக்குமென்றும் [illegible] என்று தெரிகிறது.

சீனாவின் மக்கள் தொகை 60,10,00,000 என்று தெரிகிறது.

வேலைக்குத் தகுந்த ஊதியம் என்ற அடிப்படையில் சம்பள முறை இருக்க வேண்டுமென்று சூ என்-லாய் சிபார்சு செய்தார் என்று தெரிகிறது.

அதுவும், கம்யூனிச தத்துவத்தின்படி ஒவ்வொருவருக்கும் அவரவரது தேவைக்குத் தகுந்தபடி ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

வேதாரணியம் 'சிந்தனை' படிப்பகம்

21—9—54 இரவு 8 மணிக்கு தோழர் வீ இராமன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகப் பொதுக் குழுக் கூட்டத்தில், ஆண்களுடைய விவாக வயது 21 என்றும், பெண்களுக்கு—18 என்று வரையறுத்தும், திருமண காரியங்களில், பெண்களுடைய விருப்பத்தைப் பெற்றோர்கள் தடை செய்யக் கூடாதென்றும், தாரமிழந்த ஆடவர்கள் மறுவிவாகம் செய்வதாயிருந்தால் விதவைகளைத்தான் மணக்குகொள்ள வேண்டும் எனவும் மத்திய சர்க்கார் கொண்டு வந்த சட்டங்களை வரவேற்றும், இக்கர் கோவிலுக்குச் சொந்தமான வெட்டிக் குளத்தை பொதுமக்கள் அசுத்தப்படுத்தாதிருக்க ஆவன செய்யும்படி கோவில் நிர்வாகிகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறப்பு

புதுக்கோட்டை, திரு[illegible]வர் நகரிலிருக்கும் எம். ஐ[illegible] முகம்மது அவர்களின் த[illegible]யார் மீரா பீபிக்கு கடந்த 3—9—54-அன்று ஒரு பெண் மகவு பிறந்தது. சேயும் தாயும் நலம்.

திருமணங்கள்

25—8—54-ல், ஆதிச்சபுரத்தில், தோழர் சக்கரபாணி தலைமையில், தோழர் கணேசன்—தோழியர் மங்களம் திருப்பு[illegible] நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தியும், [illegible]த் திருமணத்தின் அவசியம் பற்றியும், பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை அளிக்கப்பட்டது — வரவேற்கிறோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

* * *

16—9—54 காலை 8 மணிக்கு நாகூர் மேலத்தெருவில் தோழர் இரத்தினசாமி — தோழியர் அம்சவல்லி சீர்திருத்தத் திருமணம் தோழர் கலியாணம் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள், குறளின் மீது ஆணையிட்டு வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழி எடுத்துக்கொண்டபின் மலர் மாலைகள் மாற்றிக்கொண்டனர். மணமக்களை வாழ்த்தி, தோழர் ஏ. என். வாண்டியன் மணமக்களின் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்கென ரூ 1-ம், நாகை தி. மு. கழகத்துக்கு ரூ 1-ம், நாகூர் தி. மு. [illegible]த்துக்கு ரூ. 1-ம் [illegible] அளித்தார்கள். [illegible] வளர்ச்சிக்கு அன்[illegible] ரூ. 1 வரவே[illegible] [illegible]டையது—பொ[illegible]

மாபூரம் [illegible]

[illegible]

16—9—54 அன்று, திரு[illegible] பாங்குன்றத்தை அடுத்த விளாச்சேரியில், தோழியர் ஆறுமுகத்தம்மாள்—தோழர் செல்லையா திருமணம் புரோகிதம் நீக்கி நடைபெற்றது. மணமக்களை வாழ்த்திப் பல பிரமுகர்கள் பேசினர்.

* * *

சென்னை அவடி தோழியர் மோகனா—அயனாவரம் தோழர் கோவிந்தன் சீர்திருத்தத் திருமணம், 16—9—54 காலை 9 மணியளவில் நடைபெற்றது. பல தோழர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது—வரவேற்கிறோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

* * *

திருநெல்வேலி, இட்டேரி தோழர் பி பத்மநாதன்-தோழியர் செல்லம்மாள் திருமணம், 9—9—54 இரவு 9 மணிக்கு, தோழர் என். பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இத்திருமண விழாவில் தோழர்கள் என். டி. ஜேகநாதன், ஏ. டி. அரசு, அருணாசலம், ஆர். என். நடராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது—வரவேற்கிறோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

பிரெஞ்சு இராணுவ இரகசியங்கள்!

வெளியாக்கியதாக போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை!

பிரெஞ்சு இராணுவத்தின் பரம இரகசியங்களை சில கம்யூனிஸ்டுகளுக்குத் தெரிந்துவிட்டது பற்றி, தீவிரமான விசாரணை நடந்து வருவதாக பிரான்சின் உள்நாட்டு மந்திரி அறிவித்தார்.

டைட்ஸ் என்ற பாரிஸ் நகர பிரதம போலீஸ் அதிகாரி வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாயும் மந்திரி சபையினரிடம் கூறினார்.

அந்தப் போலீஸ் அதிகாரியிடம் இராணுவ இரகசியங்கள் கொண்ட தஸ்தாவேஜுகள் இருந்தனவாம்.

பிரெஞ்சு தேசிய பாதுகாப்பு உயர்தரக் கவுன்சிலின் கூட்டங்கள் பற்றிய தகவல்கள், குறைந்தது இரண்டு தடவையாவது, கம்யூனிஸ்டு ஏஜெண்டுகளுக்கு தெரியவந்திருக்கக் கூடும் என பிரெஞ்சு அரசியல் இலாக்காவினர் கருதுகின்றனராம்.

வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டைட்ஸ் என்ற போலீஸ் அதிகாரி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள குறிப்பொன்றில், 'நான் குற்றவாளியல்ல; அமெரிக்க துதராலயத்தைச் சேர்ந்த அமெரிக்க நண்பர் ஒருவருடன், நான் கைது செய்யப்படுவேன் என உணருகிறேன்; அதுவே, எதிர் கட்சியினருக்கு நான் இரகசியங்களைத் தந்துவிட்டேன் என்பதற்கான காரணமாகக் காட்டினர். என்னை வேலையிலிருந்து நீக்கியுள்ளனர். பல நாள் பார்க்காதிருந்த நண்பருடன் சேர்ந்து நண்பர் எனும் முறையில் உணவருந்தினேனே தவிர வேறில்லை; அவர்கள் செய்வது தவறானது," என்று கூறியுள்ளார்.

"வாழ வழி காட்டும் வள்ளுவர்"

26—9—54ல், வேளமலை இரயில்வே படிப்பக மன்றத்தில், தோழர் இ. ஆ. வெ. விக்கிரமாதம் தலைமையில் திருக்குறள் கழகத்தினரால் நடத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் கடலூர் ஆசிரியை, திருமதி புலவர் சா. லாரன்ஸ் வாண்ட் அம்மையார் "வாழ வழி காட்டும் வள்ளுவர்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினர்.

மேற்கு ஜெர்மனியை — இராணுவ மயமாக்க!

பிரிட்டிஷ் தொழிற் கட்சி ஆதரவு!

ஸ்கார்பரோ, செப். 28 —

ஜெர்மனியை மீண்டும் இராணுவ பலம் வாய்ந்த நாடாக ஆக்கவேண்டும் என்ற கொள்கையை பிரிட்டிஷ் தொழிற் கட்சி மாநாடு ஆதரித்தது. இதற்கு ஆதரவாக 32,70,000 வாக்குகளும், எதிராக 30,22,000 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

ஐரோப்பிய சேனைத் திட்டத்தை பிரான்ஸ் நிராகரித்தது மீண்டும் ஜெர்மன் இராணுவத் தொல்லையை உண்டுபண்ணவே என்றும், இத்திட்டத்தை அழித்தவர்கள், மேற்கத்திய ஜனநாயகவாதிகள் அல்லவென்றும், கம்யூனிஸ்டுகளும், டிகாலே குழுவினரும்தான் என்றும் தோழர் அட்லி [illegible] ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

தொழிற் கட்சியில் மிகப் பெரிய கருத்து வேற்றுமையைப் பரப்பிக் கொண்டிருக்கும் ஜெர்மனியின் இராணுவ வலிவு பற்றிய பிரச்னைக்கு ஆதரவு தேடவே தோழர் அட்லி இவ்வாறு கூறினார்.

மேற்கு ஜெர்மனி இராணுவ மயமாக்கப்பட்டால் ஜெர்மன் ஐக்கியம் கலைக்கப்படும் என்ற கருத்தை தோழர் அட்லி மறுத்து, ஏற்கனவே கிழக்கு ஜெர்மனி இராணுவ மயமாக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

மேற்கு ஜெர்மனியின் வலிவு என்பது மேற்கு நாடுகளைப் பற்றிய பிரச்னை மட்டுமல்ல; அது, சோவியத் ரஷ்யாவையும் பொறுத்த செய்தி ஆகும். ரஷ்யாவுடன் தொடர்பு கொள்வதில் பலவீனம் காரணமாக மதிப்பு காட்டக்கூடாது என்று கூறி, தோழர் அட்லி, மேற்கு நாடுகள் [illegible] ஏற்பாடுகளை பலம் [illegible] அனுபவத்தை வலி [illegible]

[illegible] குழு செலவு

[illegible], இந்தச் [illegible] ஒரு சிறு பகுதியைத் தவிர, மற்றவைகளை இவைகள் மாகாணங்கள் ஏற்றுக்கொள்ளும் என்று குறிப்பிட்டார்.

இந்துமகாசபை உறுப்பினர் ஒருவர் கோவா போன்ற உள்நாட்டு விவகாரங்களில் கவனம் செலுத்தாமல், இந்தியா, சர்வதேச விவகாரங்களில் தலையிட்டுக்கொள்கிறது என்று ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டுவந்து பேசினார். சபை, இப்பிரேரணையை நிராகரித்துவிட்டது.

ஒன்பது வல்லரசுகள் மகாநாடு ஆரம்பம்

மெண்டஸ் பிரான்ஸ் விளக்கம்

மேற்கு ஜெர்மனியின் ஆயுதக் கட்டுப்பாட்டுப் பிரச்னை பற்றிய 9 வல்லரசுகள் மகாநாடு, லண்டனில் நடைபெற்றபோது, பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ், தமது ஐரோப்பிய ஆயுத நிறுவனத் திட்டத்தின் விவரங்களை எடுத்துக் கூறினதாகத் தெரிகிறது.

அட்லாண்டிக் ஒப்பந்தத்தின்படி, குறைந்த பட்சத் தேவைக்குத் தக்கதாகவே இந்த நிறுவனம் அமைக்கப்படும் என்றும், பிரெஞ்சுத் திட்டத்துக்கு எதிராகப் பிரதிநிதிகள் ஒத்து திரண்டு வந்தாலும், ஜெர்மன் ஆயுதக் கட்டுப்பாடு பிரச்னையில் மகாநாட்டுக் குழுவின் அதிகாரத்தைப்பெற பிரெஞ்சுத் திட்டம் பெரிதும் உதவுமென்றும் அவர் மேலும் கூறினார்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சி பொருளாளர் பதவி

பேவான் தோல்வி

ஸ்கார்பரோ, செப். 28— பிரிட்டிஷ் சோஷலிஸ்டு கட்சியின் இடதுசாரிகளின் தலைவரான பேவான், தொழிற் கட்சி வருடாந்திர மாநாட்டில் கட்சியின் பொருளாளர் தேர்தலில் தோல்வி அடைந்தார்.

இப்பதவி, பிரிட்டனின் முன்னாள் சான்சிலரான கெய்ட்ஸ்கெல்லுக்குச் சென்றது. [illegible] 00 வாக்குகள் கிடைத்ததாகத் தெரிகிறது.

[illegible]ருளாளர் தேர்தலில் [illegible]னுக்கு கிடைத்த தோல்வி, [illegible]டானது உலகப் போருக்கு [illegible]னர் முதல் தடவையாக கட்சியின் நிர்வாகத்தில் அவருக்கு இடம் கிடைக்காமல் போயிற்று; என்றாலும், தொழிற் கட்சியின் நிர்வாகக் குழுவில் பேவானின் ஆதரவாளர்கள் ஐந்து பேர் இடம் பெற்றிருக்கின்றனர்.

பொருளாளர் தேர்தலின் முடிவு அறிவிக்கப்பட்டபோது தொழிற் கட்சியின் வலதுசாரி உறுப்பினர்கள் அதை ஆரவாரத்துடனும், இடதுசாரியினர் கேலியுடனும் வரவேற்றனர் என்று தெரிகிறது.

லிஸ்பன் சர்க்காரின் தவறான போக்கு!

கோவா மக்களின் குடி உரிமையை பறிக்க முயற்சி

பம்பாய், செப். 28— கோவாவிற்கு வெளியில் இருந்துகொண்டு அறப்போர் நடத்தும் கோவா மக்களின் குடி உரிமைகளைப் பறிக்க போர்ச்சுகீசிய சர்க்கார் முயற்சி செய்கின்றனர் என்று தெரிகிறது.

இதற்கான உத்தரவொன்றை போர்ச்சுகீசிய சர்க்கார் பிறப்பித்திருப்பதாக கோவா ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் தோழர் ராமன் தேசாய் கூறினார்.

கோவாவிற்கு வெளியே ஐந்தாண்டுகள் வாழும் கோவா மக்கள், தங்கள் குடி உரிமையை இழப்பார்கள் என்பதே அந்த உத்தரவாகும்.

கோவா விடுதலைக்காக சத்தியாக்கிரகம் செய்யும் கோவாவினர்களை 'வெளிநாட்டார்' என்று பெயர் சூட்ட போர்ச்சுகல் சர்க்கார் இவ்விதம் ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

இதுபோன்ற முறைகளால் போர்ச்சுகீசியர்கள் தங்கள் காலனிகளை நீடிக்க முடியாது என்றும், கோவாவில் வாழும் மக்கள் போர்ச்சுகீசியர் ஆட்சியை வெளியேற்ற முடிவு செய்துவிட்டார்கள் என்றும் தோழர் ராமன் தேசாய் கூறியுள்ளார்.

புதுடில்லி, செப். 27— 1953-ம் ஆண்டில், 68 நாடுகளிலிருந்து சுமார் 28,060 உல்லாசப் பிரயாணிகள் இந்தியாவுக்கு விஜயம் செய்தனர்.

ஹைதராபாத்தில் ரயில் விபத்து

நதியில் வீழ்ந்ததால் பலர் மாண்டனர்

ஹைதராபாத் முதலமைச்சர் தரும் சோகச் செய்தி

ஐதராபாத்— காசிபேட்டிக்கு இடையேயுள்ளதும், ஐதராபாத்திலிருந்து 50 மைல் தூரத்திலுள்ளதுமான ஆலேர் எனும் இடத்தின் அருகில், கடந்த திங்கட் கிழமை இரவு சுமார் 11 மணிக்கு பாசஞ்சர் ரயில் ஒன்று விபத்துக்குள்ளாயிற்று. அந்த ரயில் வண்டி திங்கட் கிழமை இரவு 7-30 மணிக்கு செகந்தராபாத்திலிருந்து புறப்பட்டு வந்ததாகவும், வருகிற வழியிலுள்ள [illegible] நதியின் பாலம் வெள்ளப் பெருக்கெடுப்பின் காரணமாகச் சரிந்து நதியில் விழுந்ததாகவும் தெரியவருகிறது.

விபத்து நடந்த இடத்தைப் பார்வையிடச் சென்ற ஐதராபாத் மாநில முதலமைச்சர், சட்ட சபையில் இவ்விபத்துபற்றி தகவல் அளிக்கையில், அன்று மாலை 4 மணி வரை 73 பிரேதங்கள் மீட்கப்பட்டன என்றும், எஞ்சியுள்ள மாண்டவர்களின் உடல்களைக் கண்டுபிடிக்க தீவிர வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

“அந்த வண்டியில் சுமார் 500 பேர் பிரயாணம் செய்திருக்கலாம் என்று தெரிகிறது; வண்டியிலுள்ள முதல்பெட்டியிலிருந்தவர்களும், டில்லி செல்லும் பெட்டி உட்பட கடைசிப் பெட்டியிலிருந்தவர்களும் விபத்திலிருந்து தப்பிவிட்டார்கள்; நதியில் விழுந்த பெட்டிகளில், பிரயாணிகள் தூங்கிக் கொண்டிருந்தனர்,” என்றும் தெரிவித்தார்.

நதியில் விழுந்த 5 பெட்டிகளும் சுக்குநூறாக நொறுக்கப்பட்டு சுமார் ஒரு மைல் தூரம் வரையிலும் அடித்துச் செல்லப்பட்டதாகவும், பிரேதங்களை 10 மைல் தூரம் வரை [illegible] வெள்ளம் இழுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இனம் கண்டுபிடிக்கப்பட்ட பிரேதங்களில் 7 பேர் ரயில்வே ஊழியர்கள் என்றும், அவர்களுடைய பிரேதங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மற்றொரு விபத்து

இந்த விபத்தில் சிக்கின பிரயாணிகளுக்கு உதவுமாறு ஒரு டாக்டரும், சில மாணவரும் கொண்ட குழுவினர் ஒரு லாரியில் வருகையில், அந்த லாரி குடைசாய்ந்து அதனுள்ளிருந்த 9 பேர்களுக்கும் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் முதலமைச்சர் அறிவித்தார்.

இந்த ரயில் விபத்து பற்றி மத்திய இரயில்வே பொது மானேஜர், ரயில்வே மேல் அதிகாரிகளுக்கு அனுப்பிய தகவலில், 60 பேர் கொல்லப்பட்டதாகவென்றும், 72 பேருக்குப் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், 50 பேர் இலேசாகக் காயம்பட்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். அக்டோபர் 8-ம் தேதி வரை, இந்தப் பாதை மூலம் போக்குவரத்து நடைபெற முடியாதென்றும் தெரிவித்துள்ளாராம்.

இதுபற்றி, பம்பாயிலுள்ள மத்திய ரயில்வே காரியாலயம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், என்ஜினுக்கு அடுத்தாற்போல் சேர்க்கப்பட்டிருந்த முதல் பெட்டியும், 5-வது பெட்டியும் நொறுக்கப்பட்டதென்றும், இரண்டாவது பெட்டி கவிழ்ந்ததாகவும், 3, 4-வது வண்டிகள் தண்ணீரில் மூழ்கியதாகவும், 6-வது பெட்டி சுமார் 300 அடி தூரத்திற்கு அடித்து எறியப்பட்டதாகவும், 7-வது பெட்டி தண்டவாளத்தை விட்டிறங்கி, நொறுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேடதாரியின் [illegible]படம்!
வேல்விழியாளின் சோகம்!!

காவி கட்டியவன் காமுகனானதால் நடந்த விபரீதத்தை விளக்கும் உன்னத சித்திரம்
அம்மையப்பன்
வசனம்: மு. கருணாநிதி
நேஷனல் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு
பாண்டியன் பிக்சர்ஸ் ரிலீஸ்
திராவிடமெங்கும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது
சென்னையில் பாரகன், கிரௌன், உமா, நூர்ஜஹான்

சட்டசபை உறுப்பினர்கள் சம்பளம் உயருகிறது!

குறைத்துக்கொள்ள கம்யூனிஸ்டுகளும் தயங்குகின்றனர்!

ஒரிசா சட்டசபையில் சுயேச்சை உறுப்பினர் தீர்மானம் வெற்றி!

கட்டாக், செப். 25— ஒரிசா மாநில சட்டசபை அங்கத்தினர்களின் சம்பளத்தையும் தினப் படியையும் உயர்த்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது, அந்த உறுப்பினர்கள் மாதம் ஒன்றுக்கு சம்பளமாக ரூ 150-ம், சட்டசபை கூடும் நாட்களில் தினப்படியாக ரூ 10-ம் பெற்று வருகின்றனர்.

மாதச் சம்பளம் ரூ. 200 ஆகவும் தினப்படி ரூ 12½-ஆகவும், சட்டசபை தீர்மான மூலமாக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

சம்பள உயர்வு பற்றிய இந்த தீர்மானத்தில், எல்லாக் கட்சி உறுப்பினர்களும் சுதந்திரமாக ஓட்டளிக்கும் வகையில் ஆட்சிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டனவாம். ஒரிசா சட்டசபையின் இச்சம்பளப் பிரச்னையில்தான் முதல் முறையாக கட்சிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருக்கிறதாம்.

சம்பள, படி உயர்வுகளை, அந்த [illegible] காங்கிரஸ் உறுப்பினர்களில் சிலரும், பி. சோ. கம்யூனிஸ்ட் கட்சிகளின் அங்கத்தினர்களும் எதிர்த்துப் பேசியிருக்கின்றனர்.

இப்போதுள்ள சம்பளமே போதுமானதாகும். தினப்படி ரூ 10 தரப்படுவதில் ரூ 3 தினந்தோறும் மிச்சப்படுகிறது எனவே இன்னும் உயர்வு தேவையில்லை என்று ஒரு காங்கிரஸ் உறுப்பினர் கூறினாராம்.

தான் சட்டசபை உறுப்பினரானதிலிருந்து ஒன்றரை மடங்கு மூன்றும் வகுப்பு ரயில் பிரயாணச் செலவை மட்டும் படியாகப் பெற்றுவரும் [illegible] மிஸ்ரா என்ற உறுப்பினர் இன்று தரப்படுகிற சம்பளமும், படியும் மிக அதிகமானவை; அவை குறைக்கப்பட வேண்டும் என்று ஒரு திருத்தத் தீர்மானம் கொண்டுவந்தார். ஆனால் இப்போதுள்ள சம்பள, படி விகிதங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்பதை தனது சொந்தக் கட்சியினரான கம்யூனிஸ்டு உறுப்பினர்களே விரும்பவில்லை. எனவே சம்பளம் குறைக்கப்பட வேண்டும் எனும் திருத்தம் ஓட்டுக்கே விடப்படவில்லை.

டாக்டர் டீ. மிஸ்ரா என்ற சுயேச்சை உறுப்பினர் கொண்டுவந்த சம்பள, படி விகித உயர்வுத் தீர்மானம் கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஒருவரின் சிறிய திருத்தம் ஒன்று, கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் உட்பட எல்லோராலும் நிறைவேற்றப்பட்டது.

கே. ஏ. மதியழகன் சுற்றுப்பயணம்

செப். 29: விக்கிரவாண்டி காலை வட்டாரம்
30: } லால்குடி
அக். 1: } வட்டாரம்
அக். 2, 3, 4: பட்டுக்கோட்டை வட்டாரம்

விஜயவாடா அருகே கூட்ஸ் விபத்து!

28-ம் தேதி காலை 5 30 மணி சுமாருக்கு, விஜயவாடா—ராஜமகேந்திரபுரத்திற்கிடையில், ஒரு கூட்ஸ் வண்டியிலுள்ள பெட்டி ஒன்று தடம் புரண்டது. சுமார் 1000 அடி தூரத்துக்கு ரயில் பாதை பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்கள், அறிவகம் அச்சகத்தில் அச்சிட்டு (நெ. [illegible], ஆதிநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.